செய்தி வெளியீடு எண் :52 நாள் :29.03.2021

**தேனி மாவட்டம்**
**தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021**
**நூறு சதவிகித வாக்குப்பதிவினை உறுதி செய்திடும் பொருட்டு,**
**வாக்காளர் விழிப்புணர்வு புகைப்படக் கண்காட்சியினை**
**மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர்**
**திரு ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து, பாாவையிட்டார்:-**
*******

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் - 2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்தில் வாக்காளர்கள் நூறு சதவிகித வாக்குப்பதிவினை உறுதி செய்திடும் பொருட்டு, தேனி காமராஜர் பேருந்து நிலையத்தில் இன்று (29.03.2021) வாக்காளர் விழிப்புணர்வு புகைப்படக் கண்காட்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ஹெச்.கிருஷ்ணனுண்ணி, இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து, பார்வையிட்டார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 நடைபெறவுள்ளதையொட்டி, தேனி மாவட்டத்திலுள்ள 198. ஆண்டிபட்டி, 199. பெரியகுளம் (தனி), 200. போடிநாயக்கனூர், மற்றும் 201.கம்பம் ஆகிய நான்கு சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் நூறு சதவிகித வாக்குப்பதிவை உறுதி செய்திடும் பொருட்டு, வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தின் செயல் விளக்க விழிப்புணர்வு முகாம்கள், அதிநவீன மின்னணு திரை வாகனம் மற்றும் சிறிய அளவிலான மின்னணு திரை வாகனங்களின் மூலம் கிராமப்புற, நகர்ப்புற பகுதிகளில் வாக்காளர்கள் விழிப்புணர்வு படக்காட்சிகள் நடத்துதல், மகளிர் சுய உதவிக்குழுவினரின் விழிப்புணர்வு வண்ண கோலமிடுதல், வாக்காளர்கள் கையெழுத்து இயக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி, விழிப்புணர்வு (Selfie) பதாகை, இராட்சத வண்ண பலூன் பறக்க விடுதல், கல்லூரி மாணவ, மாணவியர்களை கொண்டு விழிப்புணர்வு பேரணி, பேருந்துகள் மற்றும் ஆட்டோக்களில் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகள் (Stickers) பதிக்கும் பணி, இரு சக்கர வாகன வாக்காளர் விழிப்புணர்வு பேரணி, கிராமிய கலை நிகழ்ச்சிகள், சமையல் எரிவாயு உருளைகளில் வாக்காளர் விழிப்புணர்வு வில்லை பதிக்கும் பணி மற்றும் உழவர் சந்தையில் வாக்காளர் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்குதல், தனியார் ஜவுளி நிறுவனங்களின் வாயிலாக விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய கைப்பைகள் வழங்குதல், மாற்றுத்திறனாளிகளை கொண்டு வாகன விழிப்புணர்வு பேரணி நடத்துதல், நடமாடும் ஏ.டி.எம். வாகனம் மற்றும் ஏ.டி.எம் மையங்களில் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டு வில்லைகள் பதிக்கும் பணி போன்ற நிகழ்ச்சிகளின் மூலம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் வாக்காளர்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

அதன்படி, இன்றைய தினம் தேனி மாவட்டத்தில் வாக்காளர்கள் நூறு சதவிகித வாக்குப்பதிவினை உறுதி செய்திடும் பொருட்டு, தேனி பழைய பேருந்து நிலையத்தில் வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான வாக்காளர் விழிப்புணர்வு டி.சர்ட், தொப்பி, துண்டு பிரசுரங்கள், மடிப்பேடுகள், சுவரொட்டிகள் மற்றும் மேற்கண்டவாறு நடைபெற்ற பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளின் புகைப்படங்கள் இடம் பெற்றிருந்த புகைப்படக் கண்காட்சி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

இக்கண்காட்சியின் மூலம் வாக்களிப்பது அவசியம் குறித்து பொதுமக்கள் எளிதில் அறிந்து கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டிருந்த இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர். இதுபோன்று, பல்வேறு நிகழ்வுகள் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தொடர்ந்து நடத்தப்பட்டு, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், பொதுமக்கள் வெளியே செல்லும் போது கட்டாயம் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியை கடைபிடிப்பது மற்றும் தங்களின் சுற்றுப்புறப்பகுதிகளை சுகாதாரமாக வைத்து கொள்வது போன்ற நடவடிக்கைகளை சரிவர கடைபிடித்து, மேற்கண்டவாறு மாவட்டத்தில் நடைபெற்று வரும் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்வுகளை கருத்தில் கொண்டு, வாக்காளர்கள் அனைவரும் நூறு சதவிகிதம் தங்களின் வாக்கினை பதிவு செய்து, ஜனநாயக கடமை ஆற்றிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின் போது, காவல் துணை கண்காணிப்பாளர் முத்துராஜ், தேனி வட்டாட்சியர் தேவதாஸ், தேனி-அல்லிநகரம் நகராட்சி ஆணையாளர் நாகராஜன், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**